முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1234

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.02.2023, செவ்வாய்கிழமை

1. ஞானயுகம் படைக்க வந்த தவசியே
   ஞானிகளை உருவாக்க வந்த ஞானியே
   தானதர்மம் கொண்டு உலகையே
   தர்மலோகமாக மாற்ற மகாசக்தியாய் வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 02 ம் நாள், 14.02.2023 செவ்வாய்கிழமை)
   வரங்கள் தந்துயானே உன்னுள்
   வையகத்தை காக்கும் ஆற்றலாகஉள்ளேன்
3. உள்ளபடி நித்தம்நித்தம் உந்தனுக்கு உயர்சக்தியும் உயிர்சக்தியுமாக
   உண்மைபட ஆறுமுகன் யான் அருளிவர
   வருகவே அரங்கன் உன்செயல்கள் அனைத்துமே
   ஆறுமுகன் என் செயல்களாகும்
4. ஆகவே உலகோர் அரங்கன் உன்பதம் பற்றி
   அனுதினம் ஞானிகள் பூஜை செய்து
   வரமாக அன்னதான சேவையை
   வலுவாக தொடர்ந்து வந்தால் போதும்
5. போதுமப்பா இந்த உலக மாற்றம்
   பிசகின்றி உன்வழிகாட்டலில் நடந்தேறும்
   ஆதரவாய் யானிருந்து அடியவர் என
   உன்வழி வரும் அன்பர்கள் அனைவருக்கும்
6. பூதலத்தில் சக்தி ஊட்டி புண்ணிய லோகமாக்கி
   புகலுவேன் ஆறுமுகன் யான் உலகமாற்றத்தை
   வகையாக அரங்கன் உன்வழி நடத்துவேன்
   வரம்தந்து உலகமக்கள் யாவரையும் காப்பேன்
7. காப்பாக என்சக்தி உன்னுள் இருக்க
   கரம்படநீ எவர்க்கு தீட்சை வழங்கினாலும்
   ஒப்புகொண்டு ஆறுமுகன் அவர்கட்கு சடாட்சர சக்தியாக
   ஓங்காரபலமாக சர்வபாதுகாப்புத் தந்து அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–